**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 371/மா/2023**
**நாள்: 05.01. 2024**

திருமதி. M. வித்யா P.பண்டார்கார்,
திருநெல்வேலி – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திருநெல்வேலி மாநகராட்சி – எதிர் மனுதாரர்

திருநெல்வேலி, மேலப்பாளையம், குறிச்சி, குருநாதபுரம், புதுத்தெரு, கதவு எண்.6 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. M.வித்யா P.பண்டார்கார் என்பவரின் 08.12.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.12.2023–ல் பெறப்பட்டு, 371/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருநெல்வேலி, மேலப்பாளையம், குறிச்சி, குருநாதபுரம், புதுத்தெரு, கதவு எண்.6 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. M.வித்யா P.பண்டார்கார் என்பவர் தனது 08.12.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" 13.05.2013 அன்று பதிவு அஞ்சல் மூலம் திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு (மேலப்பாளையம் மண்டலம்) மேலப்பாளையம், குறிச்சி, குருநாதபுரம், புதுத் தெருவில் கதவு எண்.15, மற்றும் 15 A உள்ள வீடு திரு.மோகன்தாஸ் என்பவரின் பெயரில் உள்ளது.

மேற்படி வீடுகள் இரண்டும் (15, 15A) உயில் மூலம் எனக்கு பாத்தியப்பட்டது. வீட்டுத்தீர்வை இரசீதில் திரு.மோகன்தாஸ் பெயரை நீக்கம் செய்து எனது பெயரில் (M. வித்யா P.பண்டார்கார் பெயரில்) வீட்டுத் தீர்வை ரசீது வழங்க போதிய ஆவணங்களுடன் மனுச் செய்யப்பட்டது.

பல நினைவூட்டுகள் நேரிலும் கடிதம் மூலம் அனுப்பியும் எனது மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை தெரிவிக்க மாநகராட்சி நிர்வாகம் மறுக்கிறது. இத்துடன் 13.05.2023 தேதியிட்ட மனுவும் பார்வைக்காக இணைக்கப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 12.12.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 18.12.2023 அன்று தென்காசி மாவட்டம், குற்றாலம் சர்க்யூட் ஹவுஸில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.12.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. பெருமழையின் காரணமாக 18.12.2023 அன்று விசாரணை நடைபெறவில்லை. எனவே 27.12.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவருக்கும் 20.12.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் உடல் நலக்குறைவின் காரணமாக கலந்துகொள்ள இயலாத நிலையில் அவரது சார்பாக அவரது பிரதிநிதி 27.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

" திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், மேலப்பாளையம், குறிச்சி, குருநாதபுரம், புதுத்தெரு, கதவு எண்.15 மற்றும் 15/1 ஆகியவை தனது சித்தப்பா திரு.G.மோகன்தாஸ் மல்யா என்பவருக்கு பாத்தியப்பட்டது. மேற்கண்ட திரு.மோகன்தாஸ் கடந்த 18.11.2022 அன்று மங்களூரில் இறந்து விட்டார். இறப்பதற்கு முன்னர் மேலப்பாளையம் சார்பதிவாளர் அலுவலக பத்திரப்பதிவு எண்.34–2001 நாள் 17.06.2001ன்படி உயில் எழுதி வைத்துள்ளார். மேற்கண்ட உயிலின்படி மனுதாரரான திருமதி. வித்யா பண்டார்கார் அவர்களே மேற்கண்ட வீடுகளுக்கு உரிமையாளராவார்.

எனவே மேற்கண்ட உயிலின்படி, காலமான தனது சித்தப்பா திரு G.மோகன்தாஸ் மல்யா அவர்களின் பெயரை நீக்கம் செய்து தன்னுடைய பெயரில் மேற்கண்ட கதவு எண்கள் 15 மற்றும் 15/1 சொத்துக்களை தனது பெயரில் மாற்றம் செய்து, மேற்கண்ட 2 வீடுகளுக்கான சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டண வரி ஆகிய கேட்புகளை (Demand) வாரிசுதாரரான தனது பெயரில் அளித்திடுமாறு மாநகராட்சியில் மனு அளிக்கப்பட்டு, அம்மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை.

எனவே, மேற்கண்ட உயிலின் அடிப்படையில் மனுதாரர் திருமதி வித்யா பண்டார்கார் பெயருக்கு மேற்கண்ட 2 வீடுகளுக்கான சொத்துவரி மற்றும் குடிநீர் வரி ஆகியவற்றின் கேட்புகளை (Demand) மாற்றம் செய்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**5) திருநெல்வேலி மாநகராட்சியின் உதவி வருவாய் அலுவலர் 27.12.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள கதவு எண்.15, 15/1 குருநாதபுரம் புதுத்தெருவில் உள்ள 2 வீடுகளுக்கு மனுதாரரான திருமதி. வித்யா பண்டார்கார் என்பவரின் பெயரில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட சொத்துவரி பெயர் மாற்றம் இன்னும் ஓரிரு நாட்களில் மாநகராட்சியால் செய்து தரப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டல உதவி ஆணையர் தனது 16.12.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

" மனுவில் தெரிவித்துள்ள தபசில் சொத்தின் கதவு எண்.15, 15/1 குருநாதபுரம், புதுத்தெரு கட்டிடத்தின் சொத்து வரிவிதிப்பு எண் 146/044/901231, 146/044/900028க்கு திரு.மோகன்தாஸ் மல்லியா பெயரிலிருந்து திருமதி. M. வித்யா P. பண்டார்கார் பெயருக்கு சொத்துவரி பெயர் மாற்றம்

செய்யப்பட்டு மேல் நடவடிக்கை தொடரப்பட்டுள்ளது. அதற்கான பெயர் மாற்று ஆணை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுதாரர் சார்பில் ஆஜராகியவரின் வாக்குமூலம், திருநெல்வேலி மாநகராட்சி உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் மேலப்பாளையம் மண்டல உதவி ஆணையரின் அறிக்கை, ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

மனுதாரர் தனது சித்தப்பா திரு. G. மோகன்தாஸ் மல்யா எழுதியுள்ள உயிலின்படி கதவு எண்.15 மற்றும் 15/1, க்கான சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டண வரி ஆகிய கேட்புகளை வாரிசுதாரரான தனது பெயரில் மாற்றம் செய்திட உரிய நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள கதவு எண்.15, 15/1 குருநாதபுரம், புதுத்தெருவில் உள்ள 2 வீடுகளுக்கு மனுதாரரான திருமதி. வித்யா பண்டார்கார் என்பவரின் பெயரில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட சொத்துவரி பெயர் மாற்றம் இன்னும் ஓரிரு நாட்களில் மாநகராட்சியால் செய்து தரப்படும் என்று திருநெல்வேலி மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

Tamil Nadu Urban Local Bodies Act, 1998ல் Section 82, 2 (C) and Tamilnadu Urban Local Bodies Rules 2023 Rule 256 3 (b)ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

Section 82. Levy of Property Tax - (1) The Property Tax shall be levied on all (lands, buildings, telecommunication towers and storage structures built on or attached to, land) within the municipality.

2(c) In relation to any building or land, in the event of death of the person primarily liable to the payment of property tax, the person on whom the property is transferred.

shall furnish to the Commissioner within such date as may be prescribed, a return for such building or land containing such details as may be prescribed for the assessment or reassessment of the property tax to the said building or land.

Rule 256: Filing of return for levy of Property Tax -

3 (b) In the event of death of any person primarily liable as aforesaid, the person to whom the title of the deceased shall be transferred as heir ('transferee') or otherwise shall file a return to the Commissioner within one year from the date of death as per Form 3.

எனவே மனுதாரர் திருமதி. M. வித்யா P. பண்டார்கார் அவர்களுக்கு கதவு எண்.15, 15/1, குருநாதபுரம், புதுத்தெரு குடியிருப்பு கட்டிடத்திற்கு சொத்து வரிவிதிப்பு பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிட திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை 15 நாட்களுக்குள் இம்முறைமன்றத்திற்கு அனுப்பிவைக்குமாறு திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

இந்நேர்வில் வேண்டுமென்றே தாமதம் செய்து மனுதாரருக்கு வீண் மன உளைச்சலுக்கும், கால விரயத்திற்கும் பணிகளைச் செவ்வனே மேற்கொள்ளாமல் இருந்த சம்மந்தப்பட்ட பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

The Assistant Commissioner of this Zone has been extremely lax, lethargic and indifferent in his role as the supervising and reviewing authority whose such traits encourage perverse elements as the field officials concerned in this case. The Director of Municipal Administration is instructed to take necessary disciplinary action against the Assistant Commissioner also for his abdication of duties.

2024–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி. M. வித்யா P.பண்டார்கார்,
C/o. திரு.எஸ்.வேலாயுதம்,
6, புதுத்தெரு,
குறிச்சி, மேலப்பாளையம் (அஞ்சல்)
திருநெல்வேலி – 627 005.
2) ஆணையர்,
திருநெல்வேலி மாநகராட்சி,
திருநெல்வேலி.
3) உதவி ஆணையர்,
திருநெல்வேலி மாநகராட்சி,
மேலப்பாளையம் மண்டல அலுவலம்,
திருநெல்வேலி.(ஆணையர் வழியாக)
4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.
5) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
9/9